# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | அ.சா.32 |
| Name | : | வாசுகி |
| Husband Name | : | பாலமுருகன் |
| Address | : | செட்டிக்குளம் |
| Age | : | 50/2025 |

**<u>தேதி : 15.07.2025</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் செட்டிக்குளத்தில் வசித்து வருகிறேன். எதிரி வசந்தியை எனக்கு தெரியும். எதிரி வசந்தி தனியார் நிதி நிறுவனத்தில் கடன் வாங்கிகொடுத்த வகையில் எனக்கு அவர் பழக்கமானார். எதிரி தனது குடும்பத்தினரின் மருத்துவ செலவிற்காக ரூ.25,000/- கடனாக பெற்றுதரும்படி என்னிடம் கேட்டார். நான் எனது வங்கி சேமிப்பிலிருந்து மேற்கண்ட ரூ.25,000/-ஐ வசந்திக்கு கடனாக வழங்கினேன். பிறகு 1, 2 மாதங்கள் கழித்து வசந்தியை காணவில்லை, எங்கோ சென்றுவிட்டார். பின்னர்இது சம்மந்தமாக சத்தியா என்பவர் புகார் அளித்தார். மாவட்ட குற்றபிரிவு போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

நான் முதல் விசாரணையில் கூறியதைதான் போலீஸார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். வசந்திக்கு நான் ஏற்கெனவே கடன் வாங்கி கொடுத்தால்தான் பழக்கம் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் எனது சொந்த பணத்தில்தான் ரூ-25,000/- எடுத்துக்கொடுத்தேன் என்றால் சரிதான். நான்

கடன் கொடுத்ததற்கு ஆதாரமாக புரோநோட் ஏதாவது வசந்தி எழுதிக்கொடுத்தாரா என்றால் இல்லை.

40, 50 பேர் ஒன்றாக சேர்ந்துகொண்டு கடன் கேட்டதால் அவரால் கடன் தொகை திருப்பி தரமுடியவில்லைஎன்றால் சரியல்ல. கடன் கொடுத்தபிறகு வசந்தியை நான் நேரில் பார்க்கவேயில்லை. நான் நேரில் பார்த்து கேட்டிருந்தால் வசந்தி பணம் கொடுத்திருப்பார். நான் கேட்காததால்தான் வசந்தி பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வசந்திக்கு என்னை ஏமாற்றவில்லை என்றாலும், அவருக்கு என்னை ஏமாற்றும் எண்ணம் கிடையாது என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.